ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2195/9 - 2020 සැප්තැම්බර් මස 28 වැනි සඳුදා - 2020.09.28
**2195/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 அ (1) ஆம் பிரிவின் பூரண கட்டளை*

*2016 ஒகத்து மாதம் 25 ஆந் திகதிய 1981/ 84 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 181 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு. அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளின் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/7/2016/HW/57
பிரதேச செயலாளர் இல. : BK/LAN/AQURE/A3/69
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 12.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், ரம்புக்கன பிரதேச செயலாளர் பிரிவில், கினிகொட கோறளே சிறு பிரிவில், இல. 3 ஜி, கொட்டவெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொட்டவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. 142 பிற்சேர்க்கை 4 தாழ் இல. 4 மற்றும் 2017.06.29 ஆந் திகதிய இறுதி கிராம வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட காணித்துண்டு :

01. **துண்டு இல. 360 - சியம்பலாகஹமுலவத்தை - விஸ்தீரணம் : சுமார் 0.0035 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இல. 357 மற்றும் 358 ; கிழக்கு: துண்டு இல. 361 ; தெற்கு: துண்டு இல. 114 ; மேற்கு: துண்டு இல. 114, 359 மற்றும் 356.

02. **துண்டு இல. 363 - அம்பகொட்டேகும்புர அல்லது கும்புக்கஹமுலகும்புர - விஸ்தீரணம் : சுமார் 0.0002 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இல. 342 மற்றும் 341 ; கிழக்கு: துண்டு இல. 341 ; தெற்கு: துண்டு இல. 118 ; மேற்கு: துண்டு இல. 138 மற்றும் 362.

10 - 466